# மீனாவின் வாழ்வில் ஒருநாள்.....

13

**சித்திரை மாதம் 2008.**

**வெள்ளிக்கிழமை 12**

இன்று காலையில் பள்ளிக்குச் செல்லும் வழியில் சிலர், ''டேய்! அதோ பார்! ''அடி! அடி!'' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். ஏன் கூச்சல் போடுகிறார்கள் என்று அறிவதற்காக நான் விரைந்து சென்றேன்.

அங்கே, ஓணான் ஒன்று வேலியின் மீது இருந்தது. அது தன் தலையைத் தூக்கி, 'ஒரு தீங்கும் செய்யாத என்னை ஏன் துரத்துறீங்கள்? ஏன் அடிக்கிறீங்கள்? என்று கேட்பது போலப் பார்த்தது.

''டேய்! ஓணான் நம்மை முறைக்குதடா!'' என்றான் ஒரு சிறுவன் ''இந்த முறைப்பெல்லாம் எங்ககிட்டக் காட்டாதே! காட்டினால் என்ன ஆகும் தெரியுமா?'' என்றான் மற்றொரு சிறுவன்.



''ஐயோ! பாவம் '' என்றேன் நான். அருகில் நின்ற சிறுவர்கள் என்னை முறைத்துப் பார்த்தனர். நான் அஞ்சாது,'' ஏன் அதை அடிக்கிறீங்கள்? அது உங்களுக்கு என்ன தீங்கு செய்தது?'' என்று அவர்களைக் கேட்டேன். என் கேள்விக்குப் பதிலேதும் கிடைக்கவில்லை.

அவர்கள் சிறு சிறு கற்களால் ஓணானைக் குறி பார்த்து அடித்தனர் ஒரு சிறுவன் எறிந்த கல் அதன் தலையிற் பட்டு ஓணான் கீழே விழுந்தது. என்னைப் போன்ற அப்பாவிகளுக்கு



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

இதுதான் கதியா? என்பது போலத் தலையை மேலும் கீழும் ஆட்டியது; துடிதுடித்து மாய்ந்தது.

ஓணானின் அவல முடிவைக் கண்டு எவ்வளவு நேரம் அங்கே நின்றுக்கொண்டிருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை.

என் வருத்தம் என்றும் மறையாது.

**கிரகித்தல் பயிற்சி**

**விடைதருக**

**පිළිතුරු ලියන්න**

1. சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?
2. சிறுவர்களிடம் மீனா என்ன சொன்னாள்?
3. ஓணான் சிறுவர்களைப் பார்த்து என்ன சொல்வது போல் இருந்தது?
4. ஓணானுக்கு என்ன நேர்ந்தது?
5. ஓணானுக்கு ஏற்பட்ட நிலைக்குறித்து உங்கள் கருத்து என்ன?

## செயற்பாடு I

**நிறுத்தக் குறிமீடுகள்**

විරාම ලකුණු

- ஒரு வாக்கியத்தில் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடும் குறி.
  எனது பெயர் பாரதி.
  
  | . | **முற்றுப்புள்ளி** |

- ஒரு வாக்கியத்தின் பல பொருள்கள் பல தொடர்ந்து வரும் போது இடம்பெறும் குறி.
  ஜீவா தமிழும், சிங்களமும் நன்றாகப் படிப்பான்.
  
  | , | **காற்புள்ளி** |

- வினாப் பொருளைத் தரும் வாக்கியத்தின் இறுதியில் இடப்படும் குறி.
  உங்களுடைய பெயர் என்ன?
  
  | ? | **வினாக்குறி** |

- வியப்புப் பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடம் பெறும் குறி வியப்புக்குறியாகும்.
  அடடா! எத்தனை புதுமை.

| ! | **வியப்புக்குறி** |
|---|---|

## செயற்பாடு II

**நேற்று உங்கள் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளை வாக்கியங்களாக எழுதுங்கள்.**

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

## செயற்பாடு III

பன்மையாக்குங்கள்

බහු වචනයෙන් ලියන්න

1. கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்.

   ------------------------------------------------------------

2. ஓணான் வேலியின் மீது இருந்தது.

   ------------------------------------------------------------

3. அது உங்களுக்கு என்ன தீங்கு செய்தது?

   ------------------------------------------------------------

4. அவன் சிறு சிறு கற்களால் ஓணானை அடித்தான்.

   ------------------------------------------------------------

5. ஓணான் துடிதுடித்து மாய்ந்தது.

   ------------------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு IV

பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக மாற்றுங்கள்.

බහු වචන වාක්‍ය ඒක වචන වාක්‍ය ලෙස ලියන්න.

1. சிங்கங்கள் வேகமாகப் பாய்ந்தன.

   -----------------------------------------------

2. மாடுகள் புல் மேய்ந்தன.

   -----------------------------------------------

3. நட்சத்திரங்கள் வானில் மின்னின.

   -----------------------------------------------

4. அவர்கள் பூக்கள் வாங்கினார்கள்.

   -----------------------------------------------

5. பூனைகள் குட்டிகளை ஈன்றன.

   -----------------------------------------------

6. மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.

   -----------------------------------------------

7. மருத்துவர்கள் மருத்துவம் செய்தனர்.

   -----------------------------------------------

8. ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

   -----------------------------------------------

9. பட்டங்கள் வானில் பறந்தன.

-----------------------------------------------------------------------------------------------------

10. கவிஞர்கள் பாடல்கள் எழுதினர்.

-----------------------------------------------------------------------------------------------------

## செயற்பாடு V

பின்வரும் சொற்களை அவற்றின் கருத்துப்புலப்படுமாறு வாக்கியங்களில் வைத்து எழுதுவோம்.

පහත සඳහන් වචන යොදා වාක්‍ය සාදන්න.

**(உ + ம்) அன்பு - உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்.**

1. பலம் ---------------------------------------------------------------------------
2. பழம் ---------------------------------------------------------------------------
3. மனம் ---------------------------------------------------------------------------
4. மணம் ---------------------------------------------------------------------------
5. குலம் ---------------------------------------------------------------------------
6. குளம் ---------------------------------------------------------------------------
7. மரம் ---------------------------------------------------------------------------
8. மடம் ---------------------------------------------------------------------------
9. ஒலி ---------------------------------------------------------------------------
10. ஒளி ---------------------------------------------------------------------------